திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவ மனைக்கு நாள்தோறும் 500-க்கு மேற்பட்ட புறநோயாளிகள் வருகிறார்கள், எனவே, அந்த மருத்துவமனையை விரிவுபடுத்துகின்ற வகையில் லேப் பெசி லிட்டீஸ், அதுபோன்று எக்ஸ்பெர்ட் போன்ற மருத்துவர்களை நியமிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர். க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நிதிநிலையைப் பொறுத்து, இதுபோன்ற திட்டங்களை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தண்ணீர் வழங்குதல்.

*3177 திரு. ஏ. கோதண்டம் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா ?

(அ) திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள வல்லம் மற்றும் வடகால் ஆகிய கிராமங்களுக்கு தண்ணீர் வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) வல்லம் மற்றும் வடகால் கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் அமைக்கப்பட்ட ஆழ்துளைக் கிணற்றில் நீர் வற்றி விட்டதால் திட்டம் முடிக்கப்பட்டும் மக்களுக்கு பயனளிக்க முடியவில்லை. கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்ற தேவையான ஊற்றளவுள்ள மாற்று ஆழ்துளைக் கிணறு அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

9-45 மணி

திரு. ஏ. கோதண்டம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள வல்லம் மற்றும் வடகால் ஆகிய கிராமங்களுக்குத் தண்ணீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுதான் மூலக் கேள்வி. துணைக் கேள்வி ஏதேனும் இருக்கிறதா ?

திரு. ஏ. கோதண்டம் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துணைக் கேள்வி எதுவும் இல்லை என்று மிகவும் திருப்தியோடு அமர்ந்துவிட்டார்.

தாம்பரம் நகராட்சியில் குடிநீர் வழங்குதல்

*3378. திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தாம்பரம் தொகுதி, தாம்பரம் நகராட்சியில் 10 நாட்களுக்கு ஒருமுறைதான் குடிநீர் வழங்கப்படுகிறது என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே

(அ) தாம்பரம் நகராட்சியில் மூன்று நாட்களுக்கொரு முறை தற்பொழுது குடிநீர் வழங்கப்படுகிறது.

(ஆ) இந்த நிலையை மாற்றி, தினமும் குடிநீர் வழங்குவதற்கு தனியாக ஒரு திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. ஆய்வு முடிந்தவுடன், திட்டத்தினை பரிசீலனை செய்து அமுல் படுத்தப்படும்.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி இன்றைக்கு வருகிறதென்று தெரிந்ததற்குப் பின்னால், தாம்பரம் நகராட்சியின் பல்வேறு பகுதிகளுக்கு நான் நேற்று சென்று வந்தேன். அங்கே 20-வது வட்டத்தில் நேற்றையவரையில் 8 நாட்களுக்கு ஒருமுறைதான் தண்ணீர் வருகிறது. 4 ஆம் வட்டத்தில் குழாய்களில் தண்ணீர் வந்து 6 மாதமாகிறது. எனவே மாண்புமிகு அமைச்சரவர்கள் அதிகாரிகளிடம் சொல்லி, மறுபரிசீலனை செய்து, அமைச்சரவர்கள் குறிப்பிட்டதுபோல 3 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் வர ஏற்பாடு செய்வார்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி ; மாண்புமிகு பேரவைத் தலவைரவர்களே, அங்கே நீர் அழுத்தம் குறைவாக இருக்கிற காரணத்தாலே 3 நாட்களுக்கு ஒருமுறை நீர் கொடுக்கும் திட்டம் இருந்து வருகிறது. பாலாற்றிலே அமைந்துள்ள நீரேற்று நிலையத்திற்குக் கிடைக்கிற தண்ணீரை, வழியிலே இருக்கிற கிராமங்களுக்கும் கொடுக்க வேண்டியிருக்கிற காரணத்தாலே தாம்பரத்திற்குத் தண்ணீர் கொடுக்கும்போது 15 இலட்சம் லிட்டர் தண்ணீர்தான் வழங்கப்படுகிறது. ஆகவேதான் இந்தத் திட்டத்தைத் திருத்தி, நிரந்தர